கண்கள் போனதையா ராசா
யார் கண்கள் பட்டதையா ராசா
என் கண்கள் போனதையா ராசா
யார் கண்கள் பட்டதையா ராசா

விதி வந்து சேர்ந்ததோ
மலர் கொய்து சென்றதோ
சாகும் வயதிலே நான் இருக்க
இளம் குருத்தே உன்னைத் தீயில் போடுவதோ
கொள்ளி எனக்கு நீ போடாமல்
இறுதிக் கடன் மறந்து உதிர்ந்தாயோ

கண்கள் போனதையா ராசா

படலை இன்றி நாம் காத்திருப்பேன்
பள்ளி சென்ற நீ திரும்பும் வரை
சுடலைக்கு உன்னை அனுப்புவனோ
சோதனை ஏதனை ராசாவே
பகைவர் குண்டுகள் நெஞ்சினிலே நெஞ்சினிலே
சுமக்கும் உன் வீரம் வரலாறு ஆனதே
உன்னைப்போல் ஒரு வீரன் நான் பெறவே
என்ன தவம் செய்தேன் ராசாவே 2

கண்கள் போனதையா ராசா